Eye disease

* 479 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have cautioned the District Hospitals about the spread of eye disease in epidemic form during May, 1971?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

திரு. எஸ். ஆறுமுகம்: இப்போது அரசாங்க தலைமை மருத்துவமனைகளில் கண் வைத்தியம் செய்துகொள்வதற்கு வாய்ப்பாக மருத்துவர்கள் அரசாங்கச் சார்பில் நியமிக்கப்படுவதில்லை. தனிப்பட்டவர்கள் ஓய்வு நேரங்களில் வந்து கவனித்துக் கொள்கிறார்கள். ஆகவே எல்லாத் தலைமை மருத்துவ மனைகளிலும் இந்தக் கண் நோய்களைப் பாதுகாப்பதற்கு தனி மருத்துவர்களை அரசாங்கம் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கண் நோய்களைப் பாதுகாப்பதற்கு அரசிடம் திட்டம் இல்லை. கண் நோய்களை அழிக்கவும், சிகிச்சை அளிக்கவும் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனைகளிலும் படிப்படியாக இந்தக் கண் நோய் மருத்துவப் பகுதி விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான ஏற்பாடுகளைத் தொடர்ந்து அரசாங்கம் செய்யும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1971-ம் ஆண்டு இந்தக் கண் நோய் எந்தெந்த நகரங்களில் பரவியது? அதற்குரிய காரணம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி சற்று விரிவான கேள்வி. சென்னை நகரத்திலும் இன்னும் இரண்டொரு நகரங்களிலும் இந்த நோய் பரவியதாக செய்தி கிடைத்தது. ஆனால் எல்லா மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும், மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர்களுக்கும் இந்த நோய் பரவி வருகிற செய்தி அறிவிக்கப்பட்டு அதைத் தடுப்பதற்கு என்னென்ன மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும், என்ன சிகிச்சை செய்ய வேண்டும் என்பது பற்றி விளக்கமான அறிவிப்புத் தரப்பட்டது. அந்த வகையில் இந்த நோயின் வேகம் தணிக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த நோயை, பத்திரிகைகளில், பம்பாய் கண் என்று சொன்னார்கள். மறுபடியும் அது பம்பாயிலிருந்து வரக்கூடிய ஆபத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது காற்றின் மூலம் பரவுகிறது என்றும், ஒருவரையொருவர் தொடுகிறபோது பரவுகிறது என்று தெரிந்த காரணத்தினால் அந்த நோய் எங்கேயாவது காணப்படுமானால் அந்த வட்டார மக்கள் தங்களைப்

1972 மார்ச் 14]

பாதுகாத்துக்கொள்ள அந்த நோய் உள்ளவர்களிடம் நெருங்கிப் பழகாமல் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. பம்பாய்க்குப் போய் வாங்கிக் கொண்டு வருகிறவர்களை நாம் தடுக்க முடியாது.

திரு. நா. வீராசாமி: இந்த நோய் காற்றின் மூலம் பரவுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த நோய் வருவதற்கு அடிப் படைக் காரணம் என்ன என்று கண்டு பிடித்தார்களா? மின்சார விளக்கு, பாதரசத்தின் மின் ஒளி டூம் உடைந்துவிட்டால் அந்த விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் இந்த நோய் வந்து விடுகிறது என்று சொல்கிறார்கள். அது பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் தெரியுமா? அப்படிப் பாதிக்கப்பட்டவர் களில் நானும், துணைச் சபாநாயகர் அவர்களும் ஒருவர் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அடிக்கடி மின்சார வெளிச்சத்தை பார்ப்பது கண்களுக்கு நல்லதல்ல. ஆகவே அப்படி மின்சார வெளிச்சத்தை அதிகமாகப் பார்க்கும் இடங்களில் கூட அந்த வெளிச்சத்திலிருந்து பணி யாற்றுகிறவர்கள் அந்த வெளிச்சத்தை நேராகப் பார்க்காமல் பழகிக் கொள்வது நல்லது. இந்த நோய் வரக் காரணமாக இருக்கிற வைரஸ் ஒன்று இந்த நோய்க்குக் காரணமாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நீக்குவதற்கான நடவடிக்கைகள், எந்த வகையான சிகிச்சை அளித்தால் நீங்குமோ அது அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: மின்சார வெளிச்சத்திலிருந்து பணி செய்பவர் களுக்கு இந்த நோய் உண்டாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க தகுந்த கண்ணாடிகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த நோய் வருகிறது என்று நான் சொல்லவில்லை. "It is a virus infection" என்று தெளிவாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மின்சார வெளிச்சம் அதிகமாக இருக்கிற இடத்தில் அதை நேராகப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு—வெளிச்சத்தில் உள்ளவர்களுக்கு அல்ல—அதை நேராகக் கண்ணால் பார்ப்பவர்களுக்கு கண்களில் சில ஊறுகள் ஏற்படக்கூடும். அதைப் பற்றித்தான் தெரிவித்தேனே தவிர இந்த நோய் பற்றி "It was the usual bacterial conjunctivitis and probably it was a virus infection" என்ற கருத்துத்தான் தரப்பட்டிருக்கிறது.

திரு. ந. தருமலிங்கம்: சட்ட பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண் நோய் கிராமப்புறங்களில்தான் அதிகமாகப் பரவுகிறது. ஆகவே இந்தக் கண்

நோயை நீக்க கிராமப் புறங்களில் கண் நோய் மருத்துவ மனைகள் கட்டும் திட்டம் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எதெது அரசாங்கத்தால் முடியுமோ அதைத்தான் அரசாங்கம் செய்ய முயற்சிக்க முடியும். கிராமப்புறங்கள் என்று சொன்னால் பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. எனவே இடையிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளிலும், தலைமை மருத்துவ மனைகளிலும், எங்கேயாவது இந்த நோய் பரவியிருக்குமானல் அந்தப் பகுதிகளுக்கு சிகிச்சை அளிக்கத்தான் அரசாங்கம் உறுதுணையாகச் செயல்பட முடியும்.

* 480. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் 1971-ம் ஆண்டு, மே மாதம் திடீரெனப் பரவிய கண் நோய்க்கு எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரில் 1971-ஆம் ஆண்டு மே மாதம் திடீரெனப் பரவிய கண் நோய்க்கு மொத்தம் 10,974 பேருக்கு சென்னை அரசாங்கக் கண் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : இந்தக் கண் நோய்க்கு சித்த மருத்துவத்தில் சிறந்த மருந்துகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய சித்த மருந்துகளைப் பயன்படுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சித்த வைத்தியத்தில் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. இந்தக் கண் நோய்க்கு சித்த வைத்தியத்தில் மருந்து இருக்கிறது என்று இதுவரை தெரிவிக்கவில்லை. அப்படித் தெரிவிக்கப்படுமானல் பயன்படுத்த வழிவகை செய்யப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது சென்னையில் மட்டும் பரவலாக அதிகமாக வைத்தியம் செய்வதாகச் சொன்னார்கள். ஆனல் கிராமப்புறங்களில் இது அதிகமாகப் பரவி, அதிகமாக மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, இது போன்ற அவசர நேரங்களில் மொபைல் மருத்துவ மனை போன்றவற்றை வைத்து, நல்ல கண் எக்ஸ்பர்ட்டுகளை அதிலே அனுப்பி, கிராமப்புறத்தில் பரவி வரும் இந்தத் திட்டத்தை இப்படிப்பட்ட நேரங்களில் செய்ய அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு கிடைத்த விவரப்படி சென்னையில் அதிகமான எண்ணுடையவர்கள் பாதிக்கப்பட்டனர். மற்ற இடங்களில், மாவட்ட தலைநகரில் இருக்கக்கூடியவர்கள், அந்தந்த மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டார்கள்.